**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.590/2022**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-2/PW-2 |
| Name | : ரமேஷ் |
| Father/~~Husband's~~ Name | : சண்முகம் |
| Village | : எருமையூர் |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 44 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17.10.2024.

**முதல் விசாரணை–**

நான் தற்போது ரோடு ரோலர் வாகனம் ஓட்டி தொழில் செய்கிறேன். இந்தவ வழக்கு சம்பவத்தில் இறந்துபோன உத்திரியராஜ் என்கிற குமார் என்பவரை எனக்கு தெரியும். அவர் எனக்கு உறவினர். நான் வசிக்கும் பகுதிக்கு அருகில்தான் வசித்து வந்தார். அவரும் ரோடு ரோலர் வாகனம் தான் ஓட்டி வந்தார். கடந்த 3 வருடங்களுக்கு முன்பு மேற்படி ரோடு ரோலர் வாகனத்தின் உரிமையாளர் ஆஜர் எதிரி அலெக்ஸ் என்பவர் அழைத்ததன் பேரில் ரோடு ரோலர் வாகனத்தை பழுது பார்க்க வண்டலூர் இரணியம்மன் கோயில் அருகே உள்ள ஷெட்டிற்கு சென்றோம். நாங்கள் இருவரும் மேற்படி வாகனத்திற்கு ஜாக்கி போட்டு வண்டியை தூக்கி நிறுத்தியபோது மேற்படி வாகனம் கவிழ்ந்து உத்திரியராஜ் மீது விழுந்து நசுக்கியது. உடனே

குரோம்பேட்டை மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக அழைத்து சென்றோம்.

அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக சென்னை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம்.அங்கு சிகிச்சை பலனின்றி உத்திரியராஜ் இறந்துவிட்டார். மேற்படி ஷெட்டின் உரிமையாளர் தற்போது நீதிமன்ற ஆஜரில் உள்ளார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் இறந்துபோன நபர் வேலை செய்த சமயத்தில் மது அருந்தியிருந்தார் என்றால் சரிதான். மது அருந்திவிட்டு அவர் வேலை செய்ததனால் அவருடைய கவனக்குறைவால் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.590/2022**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-3/PW-3 |
| Name | : மதன்ராஜ் |
| Father/~~Husband's~~ Name | : அந்தோணி |
| Village | : எருமையூர் |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 32 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17.10.2024.

**முதல் விசாரணை–**

நான் தற்போது வெல்டிங் வேலை செய்கிறேன். இந்த வழக்கு சம்பவ விபத்தில் இறந்துபோன உத்திரியராஜ் எனது உறவினர். அவர் ரோடு ரோலர் வாகனம் ஓட்டி வந்தார். சுமார் மூன்று வருடங்களுக்கு முன்பு மேற்படி ரோடு ரோலர் வாகனத்தை பழுது பார்க்கும்போது வண்டி கவிழ்ந்து இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். நான் குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் உத்திரியராஜை பார்த்தபோது அவரது மார்பிலும், காதிலும் காயம் இருந்தது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. போன் மூலமாக எனக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.யார் தகவலை தெரிவித்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை.

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.590/2022**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-4/PW-4 |
| Name | : சரவணன் |
| Father/~~Husband's~~ Name | : முனுசாமி |
| Village | : தர்காஸ்ட் |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 37 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17.10.2024.

**முதல் விசாரணை–**

நான் தற்போது எஞ்ஜீனியராக வேலை செய்கிறேன். இந்த வழக்கு சம்பவ விபத்தில் இறந்துபோன உத்திரியராஜ் எனது உறவினர். அவர் ரோடு ரோலர் வாகனம் ஓட்டி வந்தார். சுமார் மூன்று வருடங்களுக்கு முன்பு மேற்படி ரோடு ரோலர் வாகனத்தை பழுது பார்க்கும்போது வண்டி கவிழ்ந்து இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். நான் குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் உத்திரியராஜை பார்த்தபோது அவரது மார்பிலும், காதிலும் காயம் இருந்தது. மேற்படி ரோடு ரோலர் வாகனத்தின் உரிமையாளர் தற்போது நீதிமன்ற ஆஜரில் உள்ளார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. சம்பவம் குறித்து போன் மூலமாக தகவல் தெரிவிக்கப்பட்டது. காவல்துறையினர் சொல்லிதான் அந்த வாகனத்தின் உரிமையாளர் யாரென்று எனக்கு தெரியும். எனக்கு என்னுடைய சின்ன மாமா போன் மூலமாக சொல்லிதான் சம்பவம் பற்றி தெரியும்.

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.

# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

**CC No.590/2022**

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-5/PW-5 |
| Name | : நரேஷ்குமார் |
| Father/~~Husband's~~ Name | : மூர்த்தி |
| Village | : தர்காஸ்ட் |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 32 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17.10.2024.

**முதல் விசாரணை–**

நான் தற்போது பிசினஸ் செய்து வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்துபோனவர், நான் வசிக்கும் பகுதிக்கு அருகில் வசித்து வந்தார். அவர் ரோடு ரோலர் வாகனம் ஓட்டி வந்தார். மேற்படி வாகனத்தின் உரிமையாளர் அலெக்ஸ் தற்போது நீதிமன்ற ஆஜரில் உள்ளார். சுமார் மூன்று வருடங்களுக்கு முன்பு மேற்படி உத்திரியராஜ் வண்டலூரிலுள்ள ஷெட்டில் வேலை பார்க்கும்போது ரோடு ரோலர் வாகனம் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது என்று கேள்விபட்டேன். அதில் அவர் இறந்து விட்டார். அவரின் பிரேதத்தை வீட்டிற்கு எடுத்து வந்தார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தபோது உத்திரியராஜ் என்பவர் என்னுடைய உறவினர் இல்லை என்பதனை நான் சொன்னேன்.

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.